1990 ஆகஸ்டு 22]

மூளைக் காய்ச்சல்

*4923—திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) தனியார்கள் வளர்த்து வரும் பன்றிகளின் நடமாட் டத்தினால் மூளைக் காய்ச்சல் போன்ற தொற்றுநோய் பரவு கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பன்றிகளைக் கட்டுப்படுத்தி வளர்ப்ப தற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கொசுக்கள் பன்றிகளைக் கடித்து, பின்பு அது மனி தர்களைக் கடிப்பதனால் மூளைக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவுகின்றன.

(ஆ) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 241 பிரிவு, பன்றிகளைப் பிடித்து அழிக்கவும் கட்டுப் படுத்தவும் வழி செய்கிறது. மாவட்ட ஆட்சியாளர்கள் மேற் கூறப்பட்ட சட்டத்தைப் பிரகடனம் செய்து பன்றிகளை அழிக்க லாம் அல்லது கட்டுப்படுத்தலாம்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகள், நகராட்சிகள் போன்ற பெரிய நகர்ப் புறங்களில் மூளைக் காய்ச்சல் நோய் என்பது தொடர்ந்து தாக் கும் நிலையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட தைப் போல, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆரம்ப காலத்தில் பன்றிகளைச் கொன்றார்கள். தற்போது நிறுத்தி விட்டார்கள். ஆகவே, அந்த நோய் தொடர்ந்து தாக்கும் சூழ்நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. ஆகவே, பன்றிகள் வளர்ப்பதைத் தடை செய்ய அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்திலேயே வழிவகை இருக்கின்ற கார ணத்தால், அதிகாரிகளுக்கு இது குறித்து வலியுறுத்தப்பட்டு, அவர்களும் நடவடிக்கைகள் எடுப்பதற்கான வழிவகைகளை இந்த அரசு உள்ளாட்சித்துறை மூலமாகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன் : மூளைக் காய்ச்சல் நோயைத்தடுக்கும் வகையில் தடுப்பூசி தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? இலவச ஊசி போட அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தடுக்கிற வகையில் பூச்சிகொல்லி மருந்துகள், இந்த நோய் பரவுகிற இடங்களில் முன்னெச்சரிக்கையாக தெளிக்கப்படுகிறது. அது தான் இப்போது செயல்படுகின்ற முன்னேற்பாடு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இந்தக் கேள்வியில் தனியார் வளர்த்துவரும் பன்றிகள் என்று இருக்கிறது. இதில் பிரைவேட் செக்டார், பப்ளிக் செக்டார் என்று தனித்தனியாக இருக்கிறதா? (சிரிப்பு) எங்கள் ஊரில் செயின்ட் ஜோசப் காலேஜில் நிறைய பன்றிகளை வளர்க்கிறார்கள். அவர்கள் பராமரிப்பு ரொம்ப நன்றாக இருக்கிறது. அதாவது ரைனாசரஸ் மிருகம் போல பெரியதாக இருக்கிறது. பெரும் பெரும் பன்றி களாக இருக்கின்றது. அவர்கள் வளர்க்கும் முறை நன்றாக இருக்கிறது. 100, 100 பன்றிகளாக அழைத்துக் கொண்டு போகிறார்கள். அழைத்துக் கொண்டு வருகிறார்கள், காவிரியில் குளிப்பாட்டுகிறார்கள். ஆனால், தனியார் சிலர் பன்றிகளை வளர்க்கும்போது, இதுபோல சில சமயங்களில் அவைகளைப் கொல்வதற்காகப் பிடிக்கும்போது பிரச்சினை வருகிறது. இதற்கு சட்டத்தில் வழிகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால், அந்தச் சட்டத்தை நீங்கள் அமல்படுத்துகிறீர்களா என்றுதான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : சட்டத்தை அமல் படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த அரசு அமைக்கப்பட்ட பிறகு, தொடர்ந்து இந்தக் கேள்வியை நான் எழுப்பி வந்திருக்கிறேன். அமைச்சர் அவர்களும் சட்டத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டுதான் இருக் கிறார்கள். ஆனால், இதுவரைக்கும் பன்றிகள் ஒழிக்கப்பட்ட தாகத் தெரியவில்லை. என் தொகுதியில் அவைகள் கழிப்பறை களில்தான் வாசம் செய்கின்றன. பெண்கள் போக முடிய வில்லை. இதைப் பலமுறை நான் பேசியிருக்கிறேன். ஆகவே, கறாராக நடவடிக்கை எடுத்து, இப்போது அந்தப் பன்றிகளைக் கட்டுப்படுத்தி, திரு. தீட்சிதர் அவர்கள் சொன்னது போல, வெள்ளைப் பன்றிகளைக் கட்டுப்பாட்டோடு வளர்க்க பண்ணை முறைகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? தனியார் பன்றிகளை வளர்க்க கட்டுப்பாடு முறைகள் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பன்றிகள், மாடுகள் இவைகளைப் போன்றவைகளை மாநகராட்சிகள், நகராட்சிகள் எல்லாம் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், சட்டத்தை மட்டுமே முழுவதும் நடைமுறைப்படுத்தி, அவைகளைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை அம்மையார் அவர்கள் நன்றாக அறிவார்கள். இவைகளை வளர்ப்பதால் பல குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. முறையாக வளர்ப்பதற்கான முறைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, முறையாகத்தான் அதைச் செயல்படுத்த வேண்டுமே தவிர, தடுத்தால் பிரச்சினை வரும். பிறகு, அம்மையார் அவர்களே, இந்தந்தக் குடும்பங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும், என்ன செய்வது என்றும் கேட்கக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே நாம் இதன் மூலமாக வலியுறுத்தித்தான் படிப்படியாகச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-50 மணி

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பன்றி வளர்ப்பவர்களுடைய சௌகரியத்திற்காக ஊருக்கு வெளியே தனியாக இடங்களை ஒதுக்கி, பட்டிகள் அமைத்து இந்த இடங்களில்தான் பன்றிகள் அடைக்கப்படுமென்று ஓர் அறிவிப்பு தந்து, அந்த அடிப்படையில் அரசு பாதுகாப்பு தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடுகள் வளர்ப்பது குறித்து இதுபோல செய்யலாமா என்ற பரிசீலனை உள்ளது. இப்படித் திட்டங்கள் வந்தால் பொதுமக்கள் எந்த அளவிற்கு அதற்கு ஆதரவு அளிப்பார்கள் என்பதையும் அறிய வேண்டிய காலக் கட்டம் இருப்பதால் இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உஞ்சனை கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 7887 திரு. கே. ஆர். இராமசாமி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கண்ணங்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த உஞ்சனை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) அந்தப் பணிகள் எப்பொழுது துவங்கப்படும்’